**செய்தி வெளியீடு எண்: 150** **நாள்: 20.02.2020**

# அகரமுதலித் துறை ஏற்பாட்டில்
# “வணிக நிறுவனங்களில்
# தூய தமிழ்த் திட்டம்”
# உலகத் தாய்மொழி நாளில் தொடக்கவிழா!

புதிய தமிழ்க் கலைச்சொற்களை உருவாக்கி அவற்றைப் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இணையம் வழியாகவும் அகராதிகள் வழியாகவும் வெளியிடுவதற்கென்று தரமணியில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் செயல்பட்டு வருகிறது. அகரமுதலித் திட்ட இயக்ககம் வழியாகச் சொற்குவை என்ற திட்டம் கடந்த ஓராண்டாக செயல்பட்டு வருகிறது. ஒரு மொழியின் வளத்திற்கும் பாதுகாப்பிற்கும் சொற்களின் எண்ணிக்கை இன்றியமையாதது. அதற்கு, காலத்திற்கேற்ற புதியக் கலைச் உருவாக்கம் மிகவும் தேவை என்ற விழிப்புணர்வை மாணவர்களுக்கு ஏற்படுத்துவதையே இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதுவரை தமிழ்நாட்டில் 13 கல்லூரிகளில் ‘சொற்குவை’ விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, 30 ஆயிரம் மாணவர்களிடமிருந்து 26 ஆயிரம் கலைச்சொற்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இதைத்தவிர இவ்வியக்ககத்தில் செயல்படும் 14469 என்ற கட்டணமில்லா அழைமையம் வழியாக இதுவரை 450க்கும் மேற்பட்டோர் தமிழ்ச்சொற்கள் குறித்த ஐயங்களைக் கேட்டு தெளிவுப் பெற்றிருக்கிறார்கள். இவ்வியக்ககத்தின் www.sorkuvai.com <http://www.sorkuvai.com> என்ற வலைத்தளத்தில் இதுவரை 3,80,186 தமிழ்ச்சொற்கள் ஆங்கிலம் மற்றும் தமிழ் விளக்கத்துடன் பதிவேற்றம் செய்யப்பட்டு, 15 ஆயிரம் நபர்கள் பார்வையிட்டு பயனடைந்துள்ளனர். இந்த இயக்ககத்தில் மாதம் இரண்டு முறை நடைபெறும் தமிழ்க் கலைக்கழக வல்லுநர்குழுக் கூட்டத்தின் வழியாக இதுவரை 16 ஆயிரம் புதிய கலைச்சொற்கள் ஏற்கப்பட்டு அவை அரசாணைக்கு அனுப்பப்பட்டுள்ளன. பிறமொழிக்கலப்பு இல்லாமல் தூயதமிழில் பேசும் அடிதட்டு மக்களையும் ஊக்குவிக்கும் வகையில் தூயதமிழ்ப் பற்றாளர் பரிசுத் திட்டமும் அறிவிக்கப்பட்டு பேருந்து நடத்துநர், பள்ளி இரவுக் காவலர், கல்லூரி மாணவர், காய்கறி விற்பனையாளர் உள்ளிட்ட பலர் இப்பரிசுக்கு விண்ணப்பித்துள்ளனர். இத்திட்டத்தை உலகம் முழுவதிலிருந்தும் ஆயிரக்கணக்கானோர் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். அகரமுதலித் திட்ட இயக்ககம் அறிவிக்கும் திட்டங்களின் வரிசையில் தற்போது ‘வணிக நிறுவனங்களில் தூயதமிழ்த் திட்டமும்’ சேர்ந்துள்ளது. பிப்பிரவரி 21 ஆம் நாள் உலகத் தாய்மொழி நாளில் அகரமுதலித் திட்ட இயக்ககத்துடன் அடையாறு மாணவர் நகலக்குழுமம் இணைந்து இத்திட்டத்தை தொடங்குகிறது. தமிழ்க் கலைக்கழகத்தின் 56ஆவது கூட்டம் 21.02.2020ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை அகரமுதலித் திட்ட இயக்ககத்திலும் பிற்பகல் 2.00 மணியளவில் அடையாறு பேருந்து நிலையத்திற்கு எதிரே உள்ள மாணவர்க நகலகத்தில் “வணிக நிறுவனங்களில் தூயதமிழ்த் திட்டம்” தொடக்க விழாவும் நடைபெறவுள்ளன. விழாவில் அகரமுதலி இயக்குநர் திரு தங்க.

காமராசு அறிமுகவுரை நிகழ்த்துகிறார். அடையாறு மாணவர் நகலகக் குழுமத்தின் நிருவாக இயக்குநர் திரு சா. அ. சௌரிராசன் அவர்கள் தலைமையுரையாற்ற, கவிஞரும் எழுத்தாளருமான திரு. ஜெயபாஸ்கரன் விழிப்புணர்வு உரை நிகழ்த்துகிறார். தமிழ்க் கலைக்கழகத்தின் அலுவல்சார் அலுவல்சாரா உறுப்பினர்கள், மதிப்புறு உறுப்பினர்கள், நகலக பணியாளர்கள், அறிஞர்கள், கல்வியியல் கல்லூரி மாணவர்கள், பொது மக்கள் உள்ளிட்டோர் பெருந்திரளாகக் கலந்து கொள்ள இருக்கிறார்கள். ஒவ்வொரு மாதமும் 21 ஆம் நாள் மாணவர் நகலகக்கிளைகளில் வாடிக்கையாளர்களிடம் பணியாளர்கள் தூய தமிழில் பேசுவார்கள் என்று நிருவாக இயக்குநர் திரு.ச.அ.சௌரிராசன் தெரிவித்துள்ளார். தமிழ்க் கலைக்கழகக் கூட்டத்தில் 550 கலைச்சொற்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளன.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**